**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.150/2025**

**ம.சா.2 சரவணன், த/பெ ராதா** **நாள் : 15.06.2026**

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. முருகம்மாள் அழைத்ததால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 06.01.2019 ஆம் தேதி மாலை சுமார் 3.30 மணிக்கு விபத்தில் இறந்த விஜி என்ற விஜயகாந்த் TN 83 T 8634 என்ற இருசக்கர வாகனத்தை கிருஷ்ணகிரி – திருப்பத்தூர் நோக்கி ஓட்டி வந்தார். அந்த நேரத்தில் நான் அவர்களுக்கு பின்னால் 10, 15 அடி தூரத்தில் எனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். எனக்கு எதிரே Passion Pro என்ற இருசக்கர வாகனம் வந்து கொண்டிருந்தது. விஜி எதிரே வந்த வாகனத்தின் மீது மோதிவிட்டார் என்றால் இல்லை, Passion Pro வாகனம் மோதியது. என்னுடைய முதல் விசாரணையில் Passion Pro என்ற மற்றொரு விசையுந்து இருசக்கர வாகனத்தின் மீது தவிர்க்க முடியாமல் மோதி விபத்து ஏற்பட்டது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். Passion Pro வாகனத்தில் வந்தவர் அன்றே இறந்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. விஜி என்ற விஜயகாந்த் இரண்டு நாட்களுக்குள் இறந்து விட்டார் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தார்கள். விஜி என்ற விஜயகாந்த் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட இறுதி அறிக்கையும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 ஆம் எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனத்தை தான் விஜி என்ற விஜயகாந்த் ஓட்டி வந்தார் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு விஜி என்ற விஜயகாந்த் காரணம் என்றால் இல்லை. விஜி என்ற விஜயகாந்த்க்கு 23 வயது என்றும், அவர் கட்டிட மேஸ்திரி வேலை செய்து வந்தார் என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.